325
College Code

பத்தாம் வகுப்பு

கணிதம்

வினாவிடை தொகுப்பு

அன்னை ஜே.கே.கே. சம்பூரணியம்மாள்
பாலிடெக்னிக் கல்லூரி, T.N.பாளையம்
Cell : 97894 56708 , 93622 99902

1.உறவுகளும் சார்புகளும்

1. $n(A \times B) = 6$ மற்றும் A = { 1,3 } எனில் n(B) ஆனது

(1) 1 (2) 2 (3) 3 (4) 6

தீர்வு :

n(A X B) = 6 , n(A) = 2 , n(B) = ?

n(A) X n(B) = n(A X B)

$$n(B) = \frac{n(AXB)}{n(A)} = \frac{6}{2} = 3$$

விடை : (3) 3

2. A = { a, b, p } , B = { 2, 3 } , C = { p, q, r, s } எனில் $n[(A \cup C) \times B]$ ஆனது

(1) 8 (2) 20 (3) 12 (4) 16

தீர்வு :

$A \cup C$ = { a, b, p, q, r, s } , B = { 2, 3 }

n($A \cup C$) = 6 , n(B) = 2

$n[(A \cup C) \times B]$ = n($A \cup C$) X n (B) = 6 X 2 = 12

விடை : (3) 12

3. A = { 1, 2 },B = { 1, 2, 3, 4 },C = { 5, 6 },D ={ 5, 6, 7, 8 } எனில் கீழே கொடுக்கப்பட்டவைகளில் எது சரியான கூற்று ?

(1).$(A \times C) \subset (B \times D)$ (2) $(B \times D) \subset (A \times C)$

(3).$(A \times B) \subset (A \times D)$ (4) $(D \times A) \subset (B \times A)$

தீர்வு :

$A \times C$ = { (1,5),(1,6), (2,5),(2,6) }

$B \times D$ = { (1,5) ,(1,6),(1,7),(1,8),(2,5),(2,6),(2,7),(2,8), (3,5),(3,6),(3,7),(3,8),(4,5),(4,6),(4.7),(4,8) }

எனவே $(A \times C) \subset (B \times D)$

விடை : (1) $(A \times C) \subset (B \times D)$

4. A = { 1,2,3,4,5} –லிருந்து B என்ற கணத்திற்கு 1024 உறவுகள் உள்ளதெனில் B-லுள்ள உறுப்புகளின் எண்ணிக்கை

(1).3 (2).2 (3) 4 (4) 8

தீர்வு :

n(A) = 5 = m , n(B) = n , n(A X B) = 1024

உறவுகளின் எண்ணிக்கை = 2^{mn} = 1024

$2^{5n} = 1024 \Rightarrow 2^{5n} = 2^{10}$

$\Rightarrow 5n = 10 \Rightarrow$ n =2

விடை : (2) 2

5. R = $\{(x, x^2) | x$ ஆனது 13-ஐ விடக் குறைவான பகா எண்கள்) என்ற உறவின் வீச்சகமானது

(1). {2,3,5,7} (2).{2,3, 5,7,11}

(3). {4,9,25,49,121} (4). {1,4,9,25,49,121}

தீர்வு :

R = $\{(x, x^2) | x$ ஆனது 13- ஐ விடக் குறைவான பகா எண்கள்}

13-ஐ விடக் குறைவான பகா எண்கள் = { 2,3,5,7,11 }

f(x)=x^2 $\Rightarrow$ f(2)=4,f(3)=9,f(5)=25,f(7)=49,f(11)=121

வீச்சகம் = { 4, 9, 25, 49, 121 }

விடை: (3) { 4, 9, 25, 49, 121 }

6. $(a + 2, 4)$ மற்றும் (5, $2a + b$)) ஆகிய வரிசை சோடிகள் சமம் எனில் (a, b) என்பது

(1).(2,-2) (2).(5, 1) (3).(2, 3) (4).(3, -2)

தீர்வு :

$(a + 2, 4) = (5, 2a + b)$

$a + 2 = 5 \Rightarrow a = 5 - 2 \Rightarrow a = 3$

$2a + b = 4 \Rightarrow 2(3) + b = 4 \Rightarrow 6 + b = 4 \Rightarrow b = -2$

விடை : (4) (3, -2)

7. $n(A) = m$ மற்றும் $n(B) = n$ என்க.A-லிருந்து B –க்குவரையறுக்கப்பட்ட வெற்றுகணமில்லாத உறவுகளின் மொத்த எண்ணிக்கை

(1). m^n (2). n^m (3). $2^{mn} - 1$ (4). 2^{mn}

தீர்வு :

n (A) = m , n (B) = n எனில்

மொத்த உறவுகளின் எண்ணிக்கை = 2^{mn}

வெற்று கணமில்லாத உறவுகளின் மொத்த எண்ணிக்கை $= 2^{mn} - 1$

விடை : (3) $2^{mn} - 1$

8. {(a, 8), (6, b)} ஆனது ஒரு சமனிச் சார்பு எனில் a மற்றும் b மதிப்புகளாவன முறையே

(1).(8, 6) (2).(8,8) (3). (6,8) (4).(6,6)

தீர்வு :

{ (a,8),(6,b) } ஆனது ஒரு சமனிச் சார்பு எனில்

{ (8,8),(6,6) } எனவே a = 8 , b = 6

விடை: (1) (8, 6)

9. A={1,2,3,4} , B={4,8,9,10} என்க.. சார்பு $f: A \to B$ ஆனது $f = \{(1,4),(2,8),(3,9),(4,10)\}$ எனக் கொடுக்கப்பட்டால் f-என்பது

(1). பலவற்றிலிருந்து ஒன்றுக்கான சார்பு

(2). சமனிச் சார்பு (3).ஒன்றுக்கொன்றான சார்பு

(4). உட்சார்பு

தீர்வு :



கணம் A உள்ள அனைத்து உறுப்புகளுக்கும் கணம் B-ல் தனித்த நிழல் உரு உள்ளது. எனவே f- ஒன்றுக்கொன்றான சார்பு

விடை : (3) ஒன்றுக்கொன்றான சார்பு

10. f (x) = $2x^2$ மற்றும் g (x) = $\frac{1}{3x}$, எனில் $f \circ g$ ஆனது

(1). $\frac{3}{2x^2}$ (2). $\frac{2}{3x^2}$ (3). $\frac{2}{9x^2}$ (4). $\frac{1}{6x^2}$

தீர்வு :

$$f(x) = 2x^2 \quad , \quad g(x) = \frac{1}{3x}$$

$$f \circ g = f(g(x)) = f\left(\frac{1}{3x}\right) = 2\left(\frac{1}{3x}\right)^2$$

$$= 2\left(\frac{1}{9x^2}\right) = \frac{2}{9x^2}$$

விடை : (3) $\frac{2}{9x^2}$

11. $f : A \to B$ ஆனது இருபுறச்சார்பு மற்றும் n (B) = 7 எனில் n (A) ஆனது

(1). 7 (2). 49 (3). 1 (4). 14

தீர்வு :

f-ஆனது இருபுறச்சார்பு மற்றும் n(B) = 7

f-ஆனது இருபுற சார்பு எனில் A மற்றும் B சம எண்ணிக்கையில் உறுப்புகளைக் கொண்டிருக்கும்

எனவே n (A) = n (B) ∴ n(A) = 7

விடை : (1) 7

12. f மற்றும் g என்ற இரண்டு சார்புகளும் $f = \{(0,1),(2,0),(3,-4),(4,2),(5,7)\}$, $g = \{(0,2),(1,0),(2,4),(-4,2),(7,0)\}$ எனக் கொடுக்கப்பட்டால் $f \circ g$ –ன் வீச்சகமானது

(1).{0,2,3,4,5} (2). {-4,1,0,2,7} ,

(3).{1,2,3,4,5} (4). {0,1,2}

தீர்வு :

$f \circ g$ (0) = f[g(0)] = f(2)=0

$f \circ g$ (1) = f[g(1)] = f(0)=1

$f \circ g$ (2) = f[g(2)] = f(4) = 2

$f \circ g$ (-4) = f[g(−4)] = f(2) = 0

$f \circ g$ (7) = f[g(7)] = f(0) = 1

∴ வீச்சகம் = { 0, 1, 2 }

விடை: (4) { 0, 1, 2 }

13. $f(x) = \sqrt{1 + x^2}$ எனில்

(1). $f(xy) = f(x).f(y)$ (2). $f(xy) \geq f(x).f(y)$

(3).$f(xy) \leq f(x).f(y)$

(4).இவற்றில்ஒன்றுமில்லை

தீர்வு :

f(x) = $\sqrt{1 + x^2}$, f(y) = $\sqrt{1 + y^2}$, f(xy) = $\sqrt{1 + x^2y^2}$

$$f(x).f(y) = \sqrt{(1 + x^2)(1 + y^2)}$$

$$= \sqrt{1 + x^2 + y^2 + x^2y^2}$$

$$\geq \sqrt{1 + x^2y^2}$$

$f(x).f(y) \geq f(xy)$

விடை : (3). $f(xy) \leq f(x).f(y)$

14. g={ (1, 1), (2, 3), (3, 5), (4, 7) } என்ற சார்பானது $g(x) = \alpha x + \beta$ எனக் கொடுக்கப்பட்டால் α மற்றும் β -வின் மதிப்பானது

(1).(-1, 2) (2).(2,-1) (3).(-1,-2) (4).(1, 2)

தீர்வு :

$g = \{(1,1),(2,3),(3,5),(4,7)\}$

$g(x) = \alpha x + \beta$,

$g(1) = 1 \Rightarrow \alpha + \beta = 1$,.....(1)

$g(2) = 3 \Rightarrow 2\alpha + \beta = 3$.....(2)

(2) –லிருந்து (1) ஐ கழிக்க $\alpha = 2$

$\alpha = 2$ என (1) பிரதியிட $\beta = -1$

விடை : (2). (2,-1)

15. $f(x) = (x+1)^3 - (x-1)^3$ குறிப்பிடும் சார்பானது

(1). நேரிய சார்பு (2). ஒரு கனச் சார்பு

(3).தலைகீழ்ச் சார்பு (4).இருபடிச் சார்பு

தீர்வு :

$f(x) = (x+1)^3 - (x-1)^3$

$= (x^3 + 3x^2 + 3x + 1) - (x^3 - 3x^2 + 3x - 1)$

$= x^3 + 3x^2 + 3x + 1 - x^3 + 3x^2 - 3x + 1$

$= 6x^2 + 2$ இது இருபடிச் சார்பு

விடை : (4). இருபடிச் சார்பு

2.எண்களும் தொடர்வரிசைகளும்

1..யூக்ளிடின் வகுத்தல் துணைக் தேற்றத்தின் படி a மற்றும் b என்ற மிகை முழுக்களுக்கு, தனித்த மிகை முழுக்கள் q மற்றும் r , a=bq+r என்றவாறு அமையுமானால் , இங்கு r ஆனது

(1). $1 < r < b$ (2). $0 < r < b$

(3). $0 \leq r < b$ (4). $0 < r \leq b$

தீர்வு :

யூக்ளிடின் வகுத்தல் துணைக் தேற்றத்தின் படி

$0 \leq r < b$

விடை : (3). $0 \leq r < b$

2. யூக்ளிடின் வகுத்தல் துணைத் தேற்றத்தைப் பயன்படுத்தி எந்தமிகை முழுவின் கனத்தையும் 9 –ஆல் வகுக்கும் போது கிடைக்கும் மீதிகள்

(1).0,1,8 (2).1,4,8 (3).0,1,3 (4). 1,3,5

தீர்வு :

$x^3 \equiv y$ (மட்டு 9)

$x = 3$ எனில் $y = 0$ (27 ஆனது 9 ஆல் வகுபடும்)

$x = 4$ எனில் $y = 1$, (63 ஆனது 9 ஆல் வகுபடும்)

$x = 5$ எனில் $y = 8$, (117 ஆனது 9 ஆல் வகுபடும்)

$\therefore$ மீதிகள் = 0, 1, 8

விடை : (1). 0,1,8

3.65 மற்றும் 117 -யின் மீ.பொ.வ-வை $65m - 117$ என்ற வடிவில் எழுதும் போது, m –ன் மதிப்பு

(1).4 (2). 2 (3). 1 (4). 3

தீர்வு :

65 மற்றும் 117-யின் மீ.பொ.வ = 13

$65m - 117 = 13 \Rightarrow 65m = 130 \Rightarrow m = 2$

விடை (2). 2

4. 1720 -ஐ பகாக் காரணிப்படுத்தும் போது, அந்த பகா எண்களின் அடுக்குகளின் கூடுதல்

(1). 1 (2). 2 (3).3 (4). 4

தீர்வு :

$1729 = 7 \times 13 \times 19 \Rightarrow 7^1 \times 13^1 \times 19^1$

$\therefore$ அடுக்குகளின் கூடுதல் $= 1 + 1 + 1 = 3$

விடை : (3).3

5. 1 முதல் 10 வரையுள்ள (இரண்டு எண்களும் உட்பட) அனைத்து எண்களாலும் வகுபடும் மிகச்சிறிய எண்

(1).2025 (2).5220 (3). 5025 (4).2520

தீர்வு :

தேவையான மிகச்சிறிய எண் 1, 2, 3, ...10

ஆகியவற்றின் மீ.பொ.ம ஆகும்

2	1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10
2	1, 1, 3, 2, 5, 3, 7, 4, 9, 5
3	1, 1, 3, 1, 5, 1, 7, 2, 9, 5
5	1, 1, 1, 1, 5, 1, 7, 2, 3, 5
7	1, 1, 1, 1, 1, 1, 7, 2, 3, 1
2	1, 1, 1, 1, 1, 1, 1, 2, 3, 1
3	1, 1, 1, 1, 1, 1, 1, 1, 3, 1
	1, 1, 1, 1, 1, 1, 1, 1, 1, 1

∴ 1,2,3,.....10-*ன் மீ.பொ.ம* = 2X2X3X5X7X2X3

= 2520

விடை : (4). 2520

6. $7^{4k} \equiv$ _____(மட்டு 100)

(1). 1 (2). 2 (3). 3 (4). 4

தீர்வு :

$7^{4k} \equiv$ __(மட்டு 100) $\Rightarrow 7^{4X1} \equiv$ 1 (மட்டு 100)

k =1 *எனில்* 7^4 *ஐ* 100 *ஆல் வகுக்க மீதி* 1 *கிடைக்கும்*

விடை : (1) 1

7. $F_1 = 1,\ F_2 = 3$ மற்றும் $F_n = F_{n-1} + F_{n-2}$, எனக் கொடுக்கப்படின் F_5 ஆனது

(1). 3 (2). 5 (3). 8 (4). 11

தீர்வு :

$$F_1 = 1, F_2 = 3\ , F_n = F_{n-1} + F_{n-2}$$

$$F_3 = F_2 + F_1 = 3 + 1 = 4$$

$$F_4 = F_3 + F_2 = 4 + 3 = 7$$

$$F_5 = F_4 + F_3 = 7 + 4 = 11$$

விடை : (4). 11

8. ஒரு கூட்டுத் தொடர் வரிசையின் முதல் உறுப்பு 1 மற்றும் பொது வித்தியாசம் 4 எனில் பின்வரும் எண்களில் எது இந்தக் கூட்டுத் தொடர் வரிசையில் அமையும் ?

(1). 4551 (2).10091 (3).7881 (4).13531

தீர்வு :

முதல் உறுப்பு a = 1 , பொது வித்தியாசம் d = 4

∴ 1, 5, 9, 13, 17 .....என்பது கூட்டுத் தொடர்

இதை 4 ஆல் வகுக்க மீதி 1 கிடைக்கும்

∴ 7881 ஆனது 4 ஆல் வகுக்க மீதி 1 கிடைக்கும்.

விடை : (3). 7881

9. ஒரு கூட்டுத் தொடர் வரிசையின் 6-வது உறுப்பின் 6 மடங்கும் 7-வது உறுப்பின் 7 மடங்கும் சமம் எனில் ,அந்தகூட்டுத் தொடர் வரிசையின் 13-வது உறுப்பு

(1). 0 (2). 6 (3). 7 (4). 13

தீர்வு :

$$6t_6 = 7t_7$$

$$6(a + 5d) = 7(a + 6d)$$

$$6a + 30d = 7a + 42d$$

$$7a + 42d - 6a - 30d = 0$$

$$a + 12d = 0 \implies t_{13} = 0$$

விடை : (1). 0

10. ஒரு கூட்டுத் தொடர் வரிசையில் 31 உறுப்புகள் உள்ளன. அதன் 16–வது உறுப்பு m எனில், அந்த கூட்டுத்தொடர் வரிசையில் உள்ள எல்லா உறுப்புகளின் கூடுதல்

(1).16 m (2). 62 m (3). 31 m (4). $\frac{31}{2}$ m

தீர்வு :

n = 31 , $t_{16} = a + 15d = m$

$$S_{31} = \frac{31}{2}[2a + 30d] \quad [S_n = \frac{n}{2}[2a + (n-1)d]$$

$$= \frac{31}{2} \times 2\,[a + 15d] = 31[a + 15d]$$

$$S_{31} = 31m$$

விடை : (3). 31m

11. ஒரு கூட்டுத் தொடர் வரிசையில் முதல் உறுப்பு 1 மற்றும் பொது வித்தியாசம் 4. இந்தக் கூட்டுத் தொடர் வரிசையின் எத்தனைக் உறுப்புகளை கூட்டினால் அதன் கூடுதல் 120 கிடைக்கும் ?

(1). 6 (2). 7 (3). 8 (4). 9

தீர்வு :

a = 1 , d = 4 , $S_n = 120$

$$\frac{n}{2}\,[2a + (n-1)\,d] = 120$$

$$\frac{n}{2}[2(1) + (n-1)4] = 120$$

$\frac{n}{2}[2+4n-4]=120$

$\frac{n}{2}[4n-2]=120$

$2n^2-n=120$

$2n^2-n-120=0$

$(n-8)(2n+15)=0$

$\therefore n=8 \quad n=\frac{-15}{2}$ (n is not negative)

−240	
$\frac{-16}{2}=-8$	$\frac{15}{2}$
−1	

விடை : (3). 8

12. $A=2^{65}$மற்றும் $B=2^{64}+2^{63}+2^{62}+\cdots..+2^0$ எனக் கொடுக்கப் பட்டுள்ளது. பின்வருவன வற்றில் எது உண்மை ?

(1). B ஆனது A ஐ விட 2^{64} அதிகம்

(2). A மற்றும் B சமம்

(3). B ஆனது A- ஐ விட 1 அதிகம்

(4). A ஆனது B- ஐ விட 1 அதிகம்.

தீர்வு :

$A=2^{65}$

$B=2^{64}+2^{63}+2^{62}+\cdots\ldots..+2^0$

$B=2^0+2^1+2^2+\cdots\ldots..+2^{64}$

$B=1+2^1+2^2+\cdots\ldots..+2^{64}$.

இது பெருக்குத் தொடர் ஆகும்

a = 1 , r = 2 , n = 65

கூடுதல் $S_n=\frac{a(r^n-1)}{r-1}$

$S_{65}=\frac{1(2^{65}-1)}{2-1}=2^{65}-1$

$S_{65}=B=2^{65}-1$

விடை : (4) A ஆனது B- ஐ விட 1 அதிகம்

13. $\frac{3}{16},\frac{1}{8},\frac{1}{12},\frac{1}{18}$ ..... என்ற தொடர் வரிசையின் அடுத்த உறுப்பு

(1). $\frac{1}{24}$ (2). $\frac{1}{27}$ (3). $\frac{2}{3}$ (4). $\frac{1}{81}$

தீர்வு :

$\frac{3}{16},\frac{1}{8},\frac{1}{12},\frac{1}{18}\ldots.$

$r=\frac{1}{8}\times\frac{16}{3}=\frac{2}{3} \quad r=\frac{1}{12}\times\frac{8}{1}=\frac{2}{3}$

இது பெருக்குத் தொடர் ஆகும்

. அடுத்த உறுப்பு = $\frac{1}{18}\times\frac{2}{3}=\frac{1}{27}$

விடை : (2). $\frac{1}{27}$

14. $t_1,t_2,t_3..,\ldots..$ என்பது ஒரு கூட்டுத் தொடர் வரிசை எனில் $t_6,t_{12},t_{18},\ldots\ldots$ என்பது

(1). ஒரு பெருக்குத் தொடர் வரிசை

(2). ஒரு கூட்டுத் தொடர் வரிசை

(3). ஒரு கூட்டுத் தொடர் வரிசையுமல்ல, பெருக்குத் தொடர் வரிசையுமல்ல

(4). ஒரு மாறிலித் தொடர் வரிசை

தீர்வு :

$t_1,t_2,t_3..,$ என்பது ஒரு கூட்டுத் தொடர் வரிசை எனில் $t_6,t_{12},t_{18},\ldots\ldots$ என்பதும் கூட்டுத் தொடர் வரிசை ஆகும்

விடை (2) ஒரு கூட்டுத் தொடர் வரிசை

15. $(1^3+2^3+3^3+\cdots+15^3)-(1+2+3+\cdots+15)$ - யின் மதிப்பு

(1).14400 (2).14200 (3).14280 (4).14520

தீர்வு :

$(1^3+2^3+3^3+\cdots+15^3)-(1+2+3+\cdots+15)$

$=\left(\frac{15\times16}{2}\right)^2-\left(\frac{15\times16}{2}\right)=(120)^2-120$

$=14400-120=14280$

விடை : (3) 14280

3. இயற்கணிதம்

1. மூன்று மாறிகளில் அமைந்த மூன்று நேரியல் சமன்பாடுகளின் தொகுப்பிற்கு தீர்வுகள் இல்லை எனில் , அத்தொகுப்பில் உள்ள தளங்கள்

(1)..ஒரே ஒரு புள்ளியில் வெட்டுகின்றன

(2)..ஒரே ஒரு கோட்டில் வெட்டுகின்றன.

(3). ஒன்றின் மீது ஒன்று பொருந்தும்

(4). ஒன்றையொன்று வெட்டாது.

தீர்வு :

ஒரு சமன்பாடுகளின் தொகுப்பிற்கு தீர்வு இல்லை எனில் அந்த தளங்கள் ஒன்றை யொன்று வெட்டிக் கொள்ளாது.

விடை : (4). ஒன்றையொன்று வெட்டாது.

2. $x+y-3z=-6,\ -7y+7z=7\ ,\ 3z=9$ என்ற தொகுப்பின் தீர்வு

(1). x=1, y=2, z=3 (2) .x= -1, y=2, z=3

(3).x= -1, y=-2, z=3 (4). x= 1 , y=2, z=3

தீர்வு :

$x+y-3z=-6$.....(1)

$-7y+7z=7 \implies -y+z=1$.....(2)

$3z=9$..... .....(3)

$(3) \implies 3z=9 \implies z=3$

$(2) \implies -y+3=1 \implies -y=-2 \implies y=2$

$(1) \implies x+y-3z=-6 \implies x+2-9=-6$

$\implies x=-6+7 \implies x=1$

விடை: (1) x=1, y=2, z=3

3. $x^2-2x-24$ மற்றும் x^2-kx-6 -யின் மீ.பொ.வ $(x-6)$ எனில் k -யின் மதிப்பு

(1).3 (2). 5 (3). 6 (4). 8

தீர்வு :

$x^2-2x-24$ & x^2-kx-6 -ன் மீ.பொ.வ $(x-6)$

$\therefore (x-6)$ ஆனது $p(x)=x^2-kx-6$ -ன் ஒரு காரணி

காரணி தேற்றப்படி

$p(6)=0 \implies 6^2-6k-6=0$

$\implies 36-6k-6=0 \implies 30-6k=0$

$\implies -6k=-30 \implies k=5$

விடை : (2). 5

4. $\frac{3y-3}{y} \div \frac{7y-7}{3y^2}$ என்பது

(1). $\frac{9y}{7}$ (2). $\frac{9y^3}{(21y-21)}$

(3). $\frac{21y^2-42y+21}{3y^3}$ (4). $\frac{7(y^2-2y+1)}{y^2}$

தீர்வு :

$$\frac{3y-3}{y} \div \frac{7y-7}{3y^2} = \frac{3(y-1)}{y} \times \frac{3y^2}{7(y-1)} = \frac{9y}{7}$$

விடை : (1). $\frac{9y}{7}$

5. கீழ்க்கண்டவற்றுள் எது $y^2+\frac{1}{y^2}$ -க்குச் சமம் இல்லை ?

(1). $\frac{y^4+1}{y^2}$ (2). $\left(y+\frac{1}{y}\right)^2$

(3). $\left(y-\frac{1}{y}\right)^2+2$ (4). $\left(y+\frac{1}{y}\right)^2-2$

தீர்வு :

$$y^2+\frac{1}{y^2} \neq \left(y+\frac{1}{y}\right)^2$$

விடை : (2) $\left(y+\frac{1}{y}\right)^2$

6. $\frac{x}{x^2-25}-\frac{8}{x^2+6x+5}$ -யின் சுருங்கிய வடிவம்

(1). $\frac{x^2-7x40}{(x-5)(x+5)}$ (2). $\frac{x^2+7x+40}{(x-5)(x+5)(x+1)}$

(3). $\frac{x^2-7x+40}{(x^2-25)(x+1)}$ (4). $\frac{x^2+10}{(x^2-25)(x+1)}$

தீர்வு :

$$\frac{x}{x^2-25}-\frac{8}{x^2+6x+5} = \frac{x}{(x+5)(x-5)}-\frac{8}{(x+5)(x+1)}$$

$$= \frac{x(x+1)-8(x-5)}{(x+5)(x-5)(x+1)} = \frac{x^2+x-8x+40}{(x+5)(x-5)(x+1)}$$

$$= \frac{x^2-7x+40}{(x^2-25)(x+1)}$$

விடை : (3). $\frac{x^2-7x+40}{(x^2-25)(x+1)}$

7. $\frac{256x^8y^4z^{10}}{25x^6y^6z^6}$ -யின் வர்க்கமூலம்

(1). $\frac{16}{5}\left|\frac{x^2z^4}{y^2}\right|$ (2). $16\left|\frac{y^2}{x^2z^4}\right|$

(3). $\frac{16}{5}\left|\frac{y}{xz^2}\right|$ (4). $\frac{16}{5}\left|\frac{xz^2}{y}\right|$

தீர்வு :

$$\sqrt{\frac{256x^8y^4z^{10}}{25x^6y^6z^6}} = \frac{16}{5}\left|\frac{x^4y^2z^5}{x^3y^3z^3}\right| = \frac{16}{5}\left|\frac{xz^2}{y}\right|$$

விடை : (4). $\frac{16}{5}\left|\frac{xz^2}{y}\right|$

8. $x^4 + 64$ முழு வர்க்கமாக மாற்ற அதனுடன் பின்வருவனவற்றுள் எதைக் கூட்ட வேண்டும்?

(1). $4x^2$ (2). $16x^2$ (3). $8x^2$ (4). $-8x^2$

தீர்வு :

$$x^4 + 64 = (x^2)^2 + 8^2$$

$$(x^2 + 8)^2 = (x^2)^2 + 8^2 + \underline{2 \times x^2 \times 8}$$

விடை: (2). $16x^2$

9. $(2x - 1)^2 = 9$ – யின் தீர்வு

(1). -1 (2). 2

(3). $-1, 2$ (4). இதில் எதுவும்இல்லை

தீர்வு :

$$(2x - 1)^2 = 9 \Rightarrow (2x - 1)^2 = 3^2$$

$$\Rightarrow 2x - 1 = \pm 3$$

$2x - 1 = 3$	$2x - 1 = -3$
$2x = 4$	$2x = -2$
$x = 2$	$x = -1$

விடை : (3). $-1, 2$

10. $4x^4 - 24x^3 + 76x^2 + ax + b$ ஒரு முழு வர்க்கம் எனில் a மற்றும் b –யின் மதிப்பு

(1).100,120 (2).10,12 (3).$-120, 100$ (4). 12,10

தீர்வு :

$$\begin{array}{r|l} & 2x^2 - 6x + 10 \\ \hline 2x^2 & 4x^4 - 24x^3 + 76x^2 + ax + b \\ & 4x^4 \\ \hline 4x^2 - 6x & -24x^3 + 76x^2 \\ & -24x^3 + 36x^2 \\ \hline 4x^2 - 12x + 10 & 40x^2 + ax + b \\ & 40x^2 - 120x + 100 \\ \hline & 0 \end{array}$$

விடை : (3). $-120, 100$

11. $q^2x^2 + p^2x + r^2 = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்களின் வர்க்கங்கள் $qx^2 + px + r = 0$ என்ற சமன்பட்டின் மூலங்கள் எனில் p, q, r என்பன

(1). ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் உள்ளன

(2). ஒரு பெருக்குத்தொடர் வரிசையில் உள்ளன

(3). கூட்டுத் தொடர் வரிசை மற்றும் பெருக்குத் தொடர் வரிசை இரண்டிலும் உள்ளன

(4). இதில் எதுவும் இல்லை.

தீர்வு :

$q^2x^2 + p^2x + r^2 = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்களின் வர்க்கங்கள் $qx^2 + px + r = 0$ என்ற சமன்பட்டின் மூலங்கள் எனில்

$$\alpha^2 + \beta^2 = \frac{-p^2}{q^2} \quad , \quad \alpha^2\beta^2 = \frac{r^2}{q^2}$$

$$\alpha + \beta = \frac{-p}{q} \quad , \quad \alpha\beta = \frac{r}{q}$$

w.k.t $(\alpha + \beta)^2 - 2\alpha\beta = \alpha^2 + \beta^2$

$$\frac{p^2}{q^2} - \frac{2r}{q} = \frac{-p^2}{q^2}$$

$$\frac{2r}{q} = \frac{2p^2}{q^2}$$

$$r = \frac{p^2}{q}$$

$$p^2 = qr$$

$\therefore$ q, p, r பெருக்குத்தொடர் வரிசையில் உள்ளன

விடை : (2) ஒரு பெருக்குத்தொடர் வரிசையில் உள்ளன

12. ஒரு நேரிய பல்லுறுப்புக் கோவையின் வரைபடம் ஒரு

(1). நேர்கோடு (2). வட்டம்

(3). பரவளையம் (4). அதிபரவளையம்

தீர்வு :

ஒரு நேரிய பல்லுறுப்புக் கோவையின் வரைபடம் ஒரு நேர்கோடு

விடை : (1) நேர்கோடு

13. $x^2 + 4x + 4$ என்ற இருபடி பல்லுறுப்புக் கோவை X-அச்சோடு வெட்டும் புள்ளிகளின் எண்ணிக்கை

(1). 0 (2). 1 (3). 0 or 1 (4). 2

தீர்வு :

$x^2 + 4x + 4 = (x+2)^2$

$(x+2) = 0 \implies x = -2$

பல்லுறுப்புக் கோவை X- அச்சை வெட்டும் புள்ளி (-2 , 0)

வெட்டும் புள்ளிகளின் எண்ணிக்கை = 1

விடை : (2) 1

14. கொடுக்கப்பட்ட அணி $A = \begin{bmatrix} 1 & 3 & 5 & 7 \\ 2 & 4 & 6 & 8 \\ 9 & 11 & 13 & 15 \end{bmatrix}$ –க்கான நிரை நிரல் மாற்று அணியின் வரிசை

(1). 2 X 3 (2). 3 X 2 (3). 3 X 4 (4). 4 X 3

தீர்வு :

$A = \begin{bmatrix} 1 & 3 & 5 & 7 \\ 2 & 4 & 6 & 8 \\ 9 & 11 & 13 & 15 \end{bmatrix}$, A-ன் வரிசை $= 3 X 4$

$A^T = \begin{bmatrix} 1 & 2 & 9 \\ 3 & 4 & 11 \\ 5 & 6 & 13 \\ 7 & 8 & 15 \end{bmatrix}$, A^T-ன் வரிசை $= 4 X 3$

விடை : (4) 4 X 3

15. A என்ற அணியின் வரிசை 2 X 3 , B என்ற அணியின் வரிசை 3 X 4 , எனில் AB என்ற அணியின் நிரல்களின் எண்ணிக்கை

(1). 3 (2) .4 (3). 2 (4). 5

தீர்வு :

A-ன் வரிசை = 2 X 3

B –ன் வரிசை = 3 X 4

AB –ன் வரிசை = 2 X 4

AB-ன் நிரல்களின் எண்ணிக்கை = 4

விடை : (2) 4

16. நிரல்கள் மற்றும் நிரைகள் சம எண்ணிக்கையில் இல்லாத அணி

(1). மூலைவிட்ட அணி (2). செவ்வக அணி

(3). சதுர அணி (4). அலகு அணி

தீர்வு :

நிரல்கள் மற்றும் நிரைகள் சம எண்ணிக்கையில் இல்லாத அணி செவ்வக அணி ஆகும்.

விடை: (2). செவ்வக அணி

17. ஒரு நிரல் அணியின் , நிரை நிரல் மாற்று அணி

(1). அலகு அணி (2). மூலைவிட்ட அணி

(3). நிரல் அணி (4).நிரை அணி

தீர்வு :

ஒரு நிரல் அணியின் , நிரை நிரல் மாற்று அணி நிரை அணி ஆகும்.

விடை : (4). நிரை அணி

18 . $2X + \begin{bmatrix} 1 & 3 \\ 5 & 7 \end{bmatrix} = \begin{bmatrix} 5 & 7 \\ 9 & 5 \end{bmatrix}$ எனில் X என்ற அணியைக் காண்க.

(1). $\begin{bmatrix} -2 & -2 \\ 2 & -1 \end{bmatrix}$ (2). $\begin{bmatrix} 2 & 2 \\ 2 & -1 \end{bmatrix}$

(3). $\begin{bmatrix} 1 & 2 \\ 2 & 2 \end{bmatrix}$ (4). $\begin{bmatrix} 2 & 1 \\ 2 & 2 \end{bmatrix}$

தீர்வு :

$2X + \begin{bmatrix} 1 & 3 \\ 5 & 7 \end{bmatrix} = \begin{bmatrix} 5 & 7 \\ 9 & 5 \end{bmatrix}$

$2X = \begin{bmatrix} 5 & 7 \\ 9 & 5 \end{bmatrix} - \begin{bmatrix} 1 & 3 \\ 5 & 7 \end{bmatrix}$

$2X = \begin{bmatrix} 4 & 4 \\ 4 & -2 \end{bmatrix}$

$X = \begin{bmatrix} 2 & 2 \\ 2 & -1 \end{bmatrix}$

விடை : (2). $\begin{bmatrix} 2 & 2 \\ 2 & -1 \end{bmatrix}$

19. $A = \begin{bmatrix} 1 & 2 \\ 3 & 4 \\ 5 & 6 \end{bmatrix}$, $B = \begin{bmatrix} 1 & 2 & 3 \\ 4 & 5 & 6 \\ 7 & 8 & 9 \end{bmatrix}$ ஆகிய அணிகளைக் கொண்டு எவ்வகை அணிகளைக் கணக்கிட முடியும் ?

(i)..A^2 (ii). B^2 (iii). AB (iv). BA

(1). (i) , (ii) மட்டும் (2). (ii) , (iii) மட்டும்

(3). (ii) , (iv) மட்டும் (4). அனைத்தும்

தீர்வு :

A –ன் வரிசை = 3 X 2

(i). A^2 சாத்தியமல்ல. [A X A = (3 X 2)(3 X 2) சாத்தியமல்ல]

B-ன் வரிசை = 3 X 3

(ii). B^2 சாத்தியமாகும் [B X B = (3 X 3)(3 X 3)]

(iii). AB சாத்தியமல்ல [A-ன் நிரல்களின் எண்ணிக்கை ≠ B-ன் நிரைகளின் எண்ணிக்கை]

(iv). BA சாத்தியமாகும். [B-ன் நிரல்களின் எண்ணிக்கை = A-ன் நிரைகளின் எண்ணிக்கை]

விடை : (3). (ii) , (iv) மட்டும்

20. $A=\begin{bmatrix}1&2&3\\3&2&1\end{bmatrix}, B=\begin{bmatrix}1&0\\2&-1\\0&2\end{bmatrix}, C=\begin{bmatrix}0&1\\-2&5\end{bmatrix}$

எனில் ,பின்வருவனவற்றின் எவை சரி ?

(i)..$AB+C=\begin{bmatrix}5&5\\5&5\end{bmatrix}$ (ii). $BC=\begin{bmatrix}0&1\\2&-3\\-4&10\end{bmatrix}$

(iii). $BA+C=\begin{bmatrix}2&5\\3&0\end{bmatrix}$ (iv). $(AB)C=\begin{bmatrix}-8&20\\-8&13\end{bmatrix}$

(1).(i) மற்றும் (ii) மட்டும் (2).(ii)மற்றும்(iii) மட்டும்

(3).(iii) மற்றும் (iv) மட்டும் (4). அனைத்தும்

தீர்வு :

(i).$AB+C=\begin{bmatrix}1+4+0&0-2+6\\3+4+0&0-2+2\end{bmatrix}+\begin{bmatrix}0&2\\-2&5\end{bmatrix}$

$=\begin{bmatrix}5&4\\7&0\end{bmatrix}+\begin{bmatrix}0&2\\-2&5\end{bmatrix}=\begin{bmatrix}5&5\\5&5\end{bmatrix}$

(ii). $BC=\begin{bmatrix}0+0&1+0\\0+2&2-5\\0-4&0+10\end{bmatrix}=\begin{bmatrix}0&1\\2&-3\\-4&10\end{bmatrix}$

(iii). $BA+C\neq\begin{bmatrix}2&5\\3&0\end{bmatrix}$ $[\because BA\ is\ of\ order\ 3\ X\ 3]$

(iv).$(AB)C=\begin{bmatrix}5&4\\7&0\end{bmatrix}\begin{bmatrix}0&1\\-2&5\end{bmatrix}=\begin{bmatrix}0-8&5+20\\0+0&7+0\end{bmatrix}$

$=\begin{bmatrix}-8&25\\0&7\end{bmatrix}$

விடை : (1).(i) மற்றும் (ii) மட்டும்

4.வடிவியல்

1. . $\frac{AB}{DE}=\frac{BC}{FD}$ எனில் ABC மற்றும் EDF எப்போழுது வடிவொத்தவையாக அமையும் ?

(1). $\angle B=\angle E$ (2). $\angle A=\angle D$

(3). $\angle B=\angle D$ (4). $\angle A=\angle F$

தீர் வு :



$\Delta ABC\sim\Delta EDF$ எனில் $\frac{AB}{DE}=\frac{BC}{FD}$ மற்றும்

$\angle A=\angle E$, $\angle B=\angle D$, $\angle C=F$

விடை : (3). $\angle B=\angle D$

2. ΔLMN – யில் , $\angle L=60°$, $\angle M=50°$. மேலும் $\Delta LMN\sim\Delta PQR$ எனில் $\angle R$ -யின் மதிப்பு

(1). $40°$ (2). $70°$ (3). $30°$ (4). $110°$

தீர்வு :



$\Delta LMN\sim\Delta PQR$, எனில்

$\angle L=\angle P$, $\angle M=\angle Q$, $\angle N=\angle R$

$\angle R=180°-(\angle L+\angle M)$

$\angle R=180°-(60°+50°)=70°$

விடை: (2). $70°$

3. இருசமபக்க முக்கோணம் ΔABC -யில் $\angle C=90°$ மற்றும் AC= 5 செ.மீ எனில் AB ஆனது

(1). 2.5 செ.மீ (2). 5 செ.மீ

(3).10 செ.மீ (4). $5\sqrt{2}$ செ.மீ

தீர்வு :



ΔABC இருசமபக்க முக்கோணம் எனில்

$\angle B=\angle A=45°, \angle C=90°$

$$\sin 45^\circ = \frac{AC}{AB} = \frac{5}{AB}$$

$$\frac{1}{\sqrt{2}} = \frac{5}{AB} \Rightarrow AB = 5\sqrt{2}$$

விடை : (4). $5\sqrt{2}$ செ.மீ

4.கொடுக்கப்பட்ட படத்தில் ST ∥ QR , PS=2 செ.மீ, மற்றும் SQ = 3 செ.மீ எனில் Δ PQR -யின் பரப்பளவுக்கும், Δ PST -யின் பரப்பளவுக்கும் உள்ள விகிதம்



(1). 25:4 (2). 25:7 (3). 25:11 (4). 25:13

தீர்வு :

இரு வடிவொத்த முக்கோணங்களின் பரப்பளவுகளின் விகிதம் அவற்றின் ஒத்த பக்கங்களின் வர்க்கங்களின் விகிதத்திற்குச் சமம்

$$\frac{\Delta \text{PQR}-\text{ன் பரப்பு}}{\Delta \text{PST}-\text{ன் பரப்பு}} = \frac{\text{PQ}^2}{\text{PS}^2} = \frac{5^2}{2^2} = \frac{25}{4}$$

(இங்கு PQ = PS + SQ =2 + 3= 5)

விடை : (1). 25:4

5. இரு வடிவொத்த முக்கோணங்கள் Δ ABC மற்றும் Δ PQR -யின் சுற்றளவுகள் முறையே 36 செ.மீ மற்றும் 24 செ.மீ ஆகும். PQ = 10 செ.மீ எனில் AB -யின் நீளம்

(a). $6\frac{2}{3}$ செ.மீ (b). $\frac{10\sqrt{6}}{3}$ செ.மீ

(c). $66\frac{2}{3}$ செ.மீ (d). 15 செ.மீ

தீர்வு :

$$\frac{\Delta \text{ABC}-\text{ன் சுற்றளவு}}{\Delta \text{PQR}-\text{ன் சுற்றளவு}} = \frac{\text{AB}}{\text{PQ}} \Rightarrow \frac{36}{24} = \frac{\text{AB}}{10}$$

$$\text{AB} = \frac{36}{24} \times 10 = 15 \text{ cm}$$

விடை : (4). 15 செ.மீ

6. Δ ABC, -யில் , DE ∥ BC, AB = 3.6 செ.மீ, AC = 2.4 செ.மீ மற்றும் AD = 2.1 செ.மீ எனில் AE -யின் நீளம்

(1). 1.4 செ.மீ (2). 1.8 செ.மீ

(3).1.2 செ.மீ (4). 1.05செ.மீ

தீர்வு :



தேல்ஸ் தேற்றப்படி

$$\frac{AD}{AB} = \frac{AE}{AC} \Rightarrow \frac{2.1}{3.6} = \frac{AE}{2.4}$$

$$\Rightarrow AE = \frac{2.1}{3.6} \times 2.4 = 1.4\ cm$$

விடை : (1) 1.4 செ.மீ

7. Δ ABC- யில் AD ஆனது ∠BAC -யின் இருசம வெட்டி. AB = 8 செ.மீ , BD = 6 செ.மீ மற்றும் DC = 3 செ.மீ எனில் , பக்கம் AC -யின் நீளம்

(1).6 செ.மீ (2).4 செ.மீ (3).3 செ.மீ (4).8 செ.மீ

தீர்வு :



கோண இருசம வெட்டி தேற்றப்படி

$$\frac{AB}{AC} = \frac{BD}{DC} \Rightarrow \frac{8}{x} = \frac{6}{3}$$

$$\Rightarrow \frac{8}{x} = 2 \Rightarrow x = 4$$

விடை : (2) 4 செ.மீ

8. கொடுக்கப்பட்ட படத்தில் ∠BAC = 90° மற்றும் AD ⊥ BC எனில்



(1). $BD.CD = BC^2$ (2). $AB.AC = BC^2$

(3). $BD.CD = AD^2$ (4). $AB.AC = AD^2$

தீர்வு :

$\Delta DBA \sim \Delta DAC$

$\frac{BD}{AD} = \frac{AD}{CD} \Rightarrow BD.CD = AD^2$

விடை : (3). $BD.CD = AD^2$

9. 6 மீ மற்றும் 11 மீ உயரமுள்ள இருகம்பங்கள் சமதளத் தரையில் செங்குத்தாக உள்ளன. அவற்றின் அடிகளுக்கு இடையே உள்ள தொலைவு 12 மீ எனில் அவற்றின்உச்சிகளுக்கு இடையே உள்ள தொலைவு என்ன ?

(1).13 மீ (2).14 மீ (3).15 மீ (4).12.8 மீ

தீர்வு :



$AD^2 = AB^2 + BD^2$

$= 5^2 + 12^2 = 25 + 144 = 169$

$AD = \sqrt{169} = 13$

விடை : (1) 13 மீ

10.கொடுக்கப்பட்ட படத்தில் , PR = 26 செ.மீ. QR= 24 செ.மீ $\angle PAQ = 90°$, PA= 6 செ.மீ , மற்றும் QA= 8 செ.மீ எனில் $\angle PQR$ – ஐக் காண்க



(1).80° (2).85° (3).75° (4).90°

தீர்வு :

$\angle PAQ = 90°$, PA= 6 செ.மீ , QA= 8 செ.மீ

$PQ = \sqrt{PA^2 + QA^2}$

$= \sqrt{36 + 64} = \sqrt{100} = 10$ செ.மீ

PR= 26 செ.மீ, QR= 24 செ.மீ , PQ= 10 செ.மீ

ΔPQR-ல்

$PQ^2 + QR^2 = 10^2 + 24^2$

$= 100 + 576$

$= 676$

$= 26^2$

$PQ^2 + QR^2 = PR^2 \quad \therefore \angle PQR = 90°$

விடை : (4).90°

11. வட்டத்தின் தொடுகோடும் அதன் ஆரமும் செங்குத்தாக அமையும் இடம்

(1). மையம் (2). தொடு புள்ளி

(3). முடிவிலி (4). நாண்

தீர்வு :



வட்டத்தின் தொடுகோடும் அதன் ஆரமும் தொடுபுள்ளியில் செங்குத்தாக அமையும்.

விடை: (2) தொடு புள்ளி

12. வட்டத்தின் வெளிப்புறப் புள்ளியிலிருந்து வட்டத்திற்கு எத்தனை தொடுகோடுகள் வரையலாம் ?

(1). ஒன்று (2). இரண்டு

(3).முடிவற்ற எண்ணிக்கை (4). பூஜ்ஜியம்

தீர்வு :



வட்டத்தின் வெளிப்புறப் புள்ளியிலிருந்து வட்டத்திற்கு இரண்டு தொடுகோடுகள் வரையலாம்

விடை : (2) இரண்டு

13. O -வை மையமாக உடைய வட்டத்திற்கு, வெளியேயுள்ள புள்ளி P –யிலிருந்து வரையப் பட்ட தொடுகோடுகள் PA மற்றும் PB ஆகும். $\angle APB = 70°$ எனில் $\angle AOB$ -யின் மதிப்பு

(1). $100°$ (2). $110°$ (3). $120°$ (4). $130°$

தீர்வு :



$OA \perp PA$, $OB \perp PB$

$\therefore \angle AOB + 90° + 90° + 70° = 360°$

$\Rightarrow \angle AOB = 360° - 250° = 110°$

விடை : (2) $110°$

14. படத்தில் O-வை மையமாக உடைய வட்டத்தின் தொடுகோடுகள் CP மற்றும் CQ ஆகும். ARD ஆனது வட்டத்தின் மீதுள்ள புள்ளி R வழியாகச் செல்லும் மற்றொரு தொடுகோடுஆகும். CP = 11 செ.மீ மற்றும் BC=7 செ.மீ எனில் BR –யின் நீளம்



(1).6 செ.மீ (2).5 செ.மீ (3).8 செ.மீ (4).4 செ.மீ

தீர்வு :

$CP = CQ = 11$ செ.மீ, $BC = 7$ செ.மீ

$BQ = CQ - BC = 11 - 7 = 4$ செ.மீ

$BQ = BR = 4$ செ.மீ

விடை : (4) 4 செ.மீ

15. படத்தில் உள்ளவாறு O -வை மையமாகக் கொண்ட வட்டத்தின் தொடுகோடு PR எனில் $\angle POQ$ ஆனது



(1). $120°$ (2). $100°$ (3). $110°$ (4). $90°$

தீர்வு :

$\angle OPQ = \angle OPR - \angle QPR$

$\angle OPQ = 90° - 60°$

$\angle OPQ = 30°$

$OP = OQ$

$\angle OPQ = \angle OQP = 30°$

$\angle POQ = 180° - \angle OPQ - \angle OQP$

$\angle POQ = 180° - 30° - 30°$

$\angle POQ = 180° - 60° = 120°$

விடை : (1) $120°$

5.ஆயத்தொலை வடிவியல்

1. $(-5, 0), (0, -5)$ மற்றும் $(5, 0)$ ஆகிய புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு

(1). 0 ச.அலகுகள் (2). 25 ச.அலகுகள்

(3). 5 ச.அலகுகள் (4). எதுவுமில்லை.

தீர்வு :



ΔABC – ன் பரப்பு $= \frac{1}{2} \times b \times h = \frac{1}{2} \times 10 \times 5$

$= 25$ ச.அ

விடை : (2). 25 ச.அலகுகள்

2. ஒரு சுவரின் அருகே நடந்து சென்றுகொண்டு இருக்கும் ஒரு நபருக்கும் சுவருக்கும் இடையே உள்ள தூரம் 10 அலகுகள். சுவரை Y- அச்சாகக் கருதினால்,அந்த நபர் செல்லும் பாதை என்பது

(1). x=10 (2). y=10 (3). x=0 (4). y=0

தீர்வு :

Y- அச்சுக்கு இணையாக 10 அலகுகள் தூரத்தில் செல்லும் நபரின் பாதை x =10

விடை : (1) x = 10

3.x = 11 எனக் கொடுக்கப்பட்ட நேர்க்கோட்டின் சமன்பாடானது

(1). X-அச்சுக்கு இணை (2).Y-அச்சுக்கு இணை

(3). ஆதிப்புள்ளி வழிச் செல்லும்

(4). (0, 11) என்ற புள்ளி வழிச் செல்லும்

தீர்வு :

Y-அச்சுக்கு இணையான நேர்கோட்டின் சமன்பாடு x = c

∴ x = 11 என்பது Y-அச்சுக்கு இணை

விடை: (2).Y-அச்சுக்கு இணை

4. (5,7), (3,p) மற்றும் (6,6) என்பன ஒரு கோட்டமைந்தவை எனில் p-யின் மதிப்பு

(1). 3 (2). 6 (3). 9 (4). 12

தீர்வு :

A (5, 7), B (3, p), C (6, 6) ஒரு கோடமைவன.

∴ AB-ன் சாய்வு = BC -ன் சாய்வு

$$\frac{p-7}{3-5} = \frac{6-p}{6-3} \qquad \left[\text{சாய்வு} = \frac{y_2-y_1}{x_2-x_1}\right]$$

$$\frac{P-7}{-2} = \frac{6-p}{3}$$

$$3p - 21 = -12 + 2p$$

$$3p - 2p = -12 + 21$$

$$p = 9$$

விடை : (3) 9

5. $3x - y = 4$ மற்றும் $x + y = 8$ ஆகிய நேர் கோடுகள் சந்திக்கும் புள்ளி

(1).(5,3) (2).(2,4) (3).(3,5) (4).(4,4)

தீர்வு :

$$3x - y = 4 \quad \ldots\ldots\ldots\ldots (1)$$

$$x + y = 8 \quad \ldots\ldots\ldots\ldots ..(2)$$

$$(1)+(2) \Rightarrow \quad 4x = 12 \Rightarrow x = 3$$

$$(2) \Rightarrow \quad x + y = 8 \Rightarrow 3 + y = 8 \Rightarrow y = 5$$

சந்திக்கும் புள்ளி (3, 5)

விடை: (3) (3,5)

6. (12,3), (4,a) என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டின் சாய்வு $\frac{1}{8}$ எனில், a -யின் மதிப்பு

(1).1 (2). 4 (3). -5 (4). 2

தீர்வு :

$$(12,3),(4,a) \quad \text{சாய்வு} = \frac{1}{8}$$

$$\text{சாய்வு} = \frac{y_2-y_1}{x_2-x_1} \Rightarrow \frac{a-3}{4-12} = \frac{1}{8}$$

$$\frac{a-3}{-8} = \frac{1}{8} \Rightarrow 8a - 24 = -8$$

$$8a = -8 + 24 = 16 \Rightarrow a = 2$$

விடை : (4). 2

7. (0,0) மற்றும் $(-8, 8)$ என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டிற்குச் செங்குத்தான கோட்டின் சாய்வு

(1). -1 (2). 1 (3). $\frac{1}{3}$ (4). -8

தீர்வு :

$$\left.\begin{matrix}(0,0) \text{ and } (-8,8) \\ \text{-ன் சாய்வு}\end{matrix}\right\} m_1 = \frac{y_2-y_1}{x_2-x_1}$$

$$= \frac{8-0}{-8-0}$$

$$= \frac{8}{-8} = -1$$

கொடுக்கப்பட்ட கோட்டிற்கு செங்குத்தான நேர்க்கோட்டின் சாய்வு $m_2 = \frac{-1}{m_1}$

$$m_2 = \frac{-1}{-1} = 1$$

விடை : (2) 1

8. கோட்டுத்துண்டு PQ –யின் சாய்வு $\frac{1}{\sqrt{3}}$ எனில் PQ –க்கு செங்குத்தான இரு சம வெட்டியின் சாய்வு

(1). $\sqrt{3}$ (2) $-\sqrt{3}$ (3) $\frac{1}{\sqrt{3}}$ (4) 0

தீர்வு :

PQ-ன் சாய்வு $m_1 = \frac{1}{\sqrt{3}}$

PQ-க்கு செங்குத்தான இருசம வெட்டியின் சாய்வு $m_2 = \frac{-1}{m_1}$

$m_2 = -\sqrt{3}$

விடை : (2) $-\sqrt{3}$

9.Y-அச்சில் அமையும் புள்ளி A –யின் செங்குத்து தொலைவு 8 மற்றும் X-அச்சில் அமையும் புள்ளி B -யின் கிடைமட்டத் தொலைவு 5 எனில் AB என்ற நேர்கோட்டின் சமன்பாடு

(1). $8x + 5y = 40$ (2). $8x - 5y = 40$

(3). $x = 8$ (4). $y = 5$

தீர்வு :

X -அச்சு தொலைவு a = 5, Y- அச்சு தொலைவு b = 8

நேர்க்கோடின் சமன்பாடு $\frac{x}{a} + \frac{y}{b} = 1$

$\Rightarrow \frac{x}{5} + \frac{y}{8} = 1$

$\Rightarrow \frac{8x+5y}{40} = 1$

$\Rightarrow 8x + 5y = 40$

விடை : (1). $8x + 5y = 40$

10. $7x - 3y + 4 = 0$ என்ற நேர்கோட்டிற்கு செங்குத்தாகவும், ஆதிப்புள்ளி வழிச்செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு

(1). $7x - 3y + 4 = 0$ (2). $3x - 7y + 4 = 0$

(3). $3x + 7y = 0$ (4). $7x - 3y = 0$

தீர்வு :

$\left.\begin{matrix}7x - 3y + 4 = 0 \text{ கோட்டிற்கு} \\ \text{செங்குத்தான கோட்டின் சமன்பாடு}\end{matrix}\right\} = 3x + 7y + k = 0$

